செ.வெ.எண். 59 நாள்: 21-08-2017

# செய்தி

## இராணுவ அலுவலர் பணிக்கான தேர்வு

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் இராணுவ அலுவலர் பணிக்கான தேர்வு வரும் நவம்பர் 19ம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்த விளம்பரம் **www.upsc.com** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பட்ட படிப்பு முடித்தவர்கள் ஆகஸ்ட் 8ம் தேதி முதல் செப்டம்பர் 9ம் தேதி வரை விண்ணப்பத்தினை ஆன்லைன் மூலம் அனுப்பலாம். குறிப்பாக முன்னாள் படைவீரர்களின் தகுதிவாய்ந்த சிறார்கள் மற்றும் ஏனையோரும் பயன்படுத்தி பயனடையலாம். இவ்வாறு விண்ணப்பித்த முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு இத்துறை மூலம் பயிற்சியளித்திட உள்ளதால் விண்ணப்பித்த விவரத்தினை பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப நகலுடன் பாளையங்கோட்டையிலுள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தமது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.